∴பிப்ரவரி 2012
FEBRUARY 2012
5 - 10
مجلة الربيع   ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

மாத இதழ்
The Spring

கவித்தூறல்கள்






## தேசீய நலனின் அழகு.!
## முஸ்லிம்களின் பங்கு..!!



இலாபம் பெருகும் பங்கு வணிகம் எது..?



இருமை போற்றும் இறுதி நபியின் இனிய வருகை!

“களம் விசாலமானது..! பணி முக்கியமானது..!!”

இலவச வெளியீடு
جمعية النجاة الخيرية

ஷேக் முஹம்மத் பின் ஸாலேஹ் அல் உஸைமீன்



காதலர் தினம்: இஸ்லாமிய பார்வை

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية



# மனப்பூர்வ வாழ்த்துக்கள் குவைத்!

குவைத்
தேசீய மற்றும் விடுதலை
தினங்கள்!





# வசந்தம்

VASANTHAM
Al-Rabae-Tamil Monthly
JANUARY 2012 ஃபிப்ரவரி 2012
மலர் 5 இதழ் 9

Chief Patron
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

General Supervisor
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

Editor
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

Editorial Board
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

Initial Lay-out
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்
Nader Belal
நாதிர் பிலால்

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency
www.zukhruf.net

PUBLISHER
வெளியீடு
IPC
ISLAM PRESENTATION COMMITTEE



CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
Editor's Desk
22447526, 22444117
Extn: 208
Cell
97266683-97848068
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail மின்னஞ்சல்
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
www.ipc.org.kw
www.vasanthamtamil.com


SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
www.facebook/vasanthamtamil
facebook twitter
www.twitter/vasantham2k
YouTube Scribd






பக்கம் 15
பக்கம் 4
பக்கம் 8
பக்கம் 12
பக்கம் 14
பக்கம் 17


அட்டைப்பட வண்ண அமைப்பு: நாதிர் பிலால்,கலை மேற்பார்வை:ரவாத்,
அட்டைப்படத் திட்ட வரைவு:முஸவ்விர்-அட்டைப்பட மேற்பார்வை:அபூஅனஸ்





14 வாழ்க்கை நெறி!
இனியன்
இங்கிலாந்து நாட்டவரான சகோதரர் இத்ரிஸ் தவ்ஃபிக் கிறித்துவ (ரோமன் கத்தோலிக்கர்) பாதிரியாராக இருந்து, சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்னர் .....

2 வாசகர் சுகந்தங்கள்
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!

3 தலையங்கம்
ஆசிரியரிடமிருந்து..!

8 பேட்டி
முஹம்மத் உஸைர்

10 IPC வழித்தடங்கள்
அப்துல்லாஹ்

11 பண்பு நலன்
நூருத்தீன்

12 ஆளுமை
அப்துல் அஸீஸ் உமர்

15 கவித்தூறல்கள்
சுமதிராம்

16 மழலையர் சோலை
சவுந்தர்யம்

18 தேசம்
அபூமதீஹா

19 சுற்றத்து செய்திகள்
அழகிய சிறியவன்

20 கருத்தாய்வுப் படிவம்




4 முகப்புக் கட்டுரை
ஷேக் அகார் முஹம்மத்
தேசீய நலனின் அழகு.!
முஸ்லிம்களின் பங்கு..!!
இஸ்லாம் தேசநலனில் பற்றுடையவர்களாக இருப்பதை ஆதரிப்பதில்லையா அல்லது அதன் வளர்ச்சிப் பாதையிலிருந்தும் பாராமுகமாய் இருக்கின்றதா..?

17 விருந்தினர் பக்கம்
ஃபாரூக்





بريد الربيع - كلمة العدد - اين تذهبون - -إنشطة اللجنة-استبيان -يتيم
غريب (نشيدة)—الغضب -الضغوط النفسية سر العمل-صفحة الإطفال
-العبقرية الصغيرة - الموسيقى-علميان -إخبار العالم -ماذا كان في 2011

# வசந்த வழிமுறை வாழியவே..!



வசந்தம்,ஜனவரி 2012 இதழ் தலையங்கம் கண்டேன்!எண்ணங்கள் குறித்த விளக்கம் அருமை.ஊடகங்களின் தாக்கம் மக்களை எந்த அளவுக்கு பாதிக்கின்றது என்பதை விளக்கியது முகப்புக்கட்டுரை!அயல்தேசத்து அநாதைகள் கவிதை ஏற்கனவே பிரபல்யமாயிருந்தாலும் மீண்டும் மனக்கண்ணீர் வடிக்கச் செய்தது. கொலைவெறிப் பாடலின் புதிய வகையிலான விமர்சனம் யோசித்துப் பார்க்க வேண்டிய ஒன்று.இளம் அறிவுஜீவியின் மரணம் குறித்து எத்ததனை சமுதாயப் பத்திரிகைகள் எழுதியிருக்கும்..?

ஷேக் அபுல் ஹஸன் அலீ நத்வி அவர்களை நினைவுகூர்ந்த ஒரே தமிழ் பத்திரிகையாக வசந்தம் இருக்கின்றது என நினைக்கின்றேன்.

சமூகவலைதளங்களில்,வசந்த வரவு நவீன வசதிகளை அழைப்புப் பணிக்காக பயன்படுத்திக் கொள்ளும் வசந்த வழிமுறை வாழியவே..!

அதிரை மு.அ. முஹம்மத் முஹ்ஸின்
அதிராம்பட்டினம் - தமிழகம்
ஃபர்வானியா - குவைத்

வசந்தம் ஜனவரி 2012 இதழ் கண்டேன். தொலைக் காட்சி முன்னால் அமரந்து கொண்டு வாழ்க்கை நாழிகைகளை வீணடிக்கும் வீணர்களுக்கு கட்டுரை நல்ல பாடம்.தொடர்களின் பெயரால் சமூகத்தை சீரழிப்போரும் சிந்திக்க வேண்டும்.அழகியா உன்னத ஆக்கம்.

அஸ்மா
தஞ்சை - தமிழகம்
ருமைதியா – குவைத்



வசந்தம் டிஸம்பர் 2011 இதழ் கண்டேன். வெங்காய பக்கோடாவும் வாழைக்காய் பஜ்ஜியும் முகப்புக் கட்டுரை இளைஞர்தம் பிரச்னையும் அவர்கள் போகும் பாதையும் குறித்து அழகாய் பேசியது. விளக்கமாய் தந்து எச்சரித்த வசந்த முல்லை தொடர்ந்து வளர ஏகஇறைவனை இறைஞ்சுகின்றேன்.

முஹம்மத் ரம்ஜத்
நித்தம்புவா - இலங்கை
ஃபிரதவ்ஸ் - குவைத்

தண்ணீர் விடும் கண்ணீர் குறித்த ஆசிரியர் தலையங்கம் அருமை.தமிழக தண்ணீர் தவிப்பு தீர இறைவன் அருள்புரிவானாக!

M.S. முஹம்மத் வைசூல் கருணை
திருச்சி-தமிழகம்
சால்மியா-குவைத்



தண்ணீர் பிரச்னை தீரவும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலிருந்து படிப்பினை கிடைக்கின்றது என்பதை அனைத்துத் தரப்பாரும் அறிந்துகொண்டால் எத்துணை நலம்..?தலையங்கம் அழகாய்ப் பேசியது. வழக்கம்போல் மார்க்கம்,ஊடகம்,கவித்தூறல்கள்,கதம்பம் என்று அனைத்தும் ஜொலித்தன. ஒரே வார்த்தைதான் சொல்ல முடியும். வசந்தம் வெறும் ஒரு பத்திரிகை மட்டுமல்ல, பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமும்கூட!

தாஜுன்னிஸா மணாளன்
அபிவிருத்தீஸ்வரம் - தமிழகம்
மங்கஃப் - குவைத்


## மின்னஞ்சலில்..!

புதிய இதழ் அழகு!இப்போது எழுத்துக்கள் வாசிக்க முடிகின்றது எளிதாக..!

அப்துல் காதிர்
qaadirqaadir@yahoo.com

## ஃபேஸ்புக்கில்..!


facebook



@Rizwana SyedAli

வசந்தம்,டிஸம்பர் 2012 இதழில் வந்த முகப்பு கட்டுரை மிகவும் அருமை. இன்றைய இளைஞர்களின் மனப்பான்மையையும். பெற்றோர்களின் அறியாமையும் பற்றி மிகவும் அருமையாக (உண்மையான) கருத்துகளை பகிர்ந்துள்ளீர்கள். மேலும் உங்கள் இதழில் வரும் அனைத்து அம்சங்களும் அருமை! உங்களின் பணி மேன் மேலும் தொடர அல்லாஹ் விடம் துஆ செய்கிறோம்!

ரிஸ்வானா ஸையத் அலீ
இராமநாதபுரம் - தமிழகம்
ஜிலீப் அல்-ஷுவைக்



@Sait Syed Buhari

தங்கள் இடுகை செய்திகளுக்கு நன்றி!



@Mohamed Rahmathullah

ஒரே வார்த்தை வசந்தம் சூப்பர்!

## ட்விட்டரில்..!

twitter

தொடருவோர்..!

M.H Mohamed Hasheer @NTRinfor
Rajaragu @Rajaragu77
marsoom @marsoommm
VAJID ALI @mnhh_ali
Sana Saleem @sanasaleem

# நெகிழ வைத்து நெடிதுயர்ந்த நீதிமான்..!

அகிலத்தாருக்கெல்லாம் முன்மாதிரி அவர்..!ஆனால் இறைவிதி மீறா இனிய அலங்காரம் அவர்..!!அனைவரும் போற்ற வேண்டிய ஆளுமையின் சிகரம் அவர்..!ஆனால், பிறரை ஆட்டிப் படைக்கும் அகங்காரம் கொண்டவர் அல்ல அவர்..!! அமைதியின் அழகு கோலோச்சும் நீரோடை அவர்..!எண்ணத்தினால்கூட பிறரை மாசுப்படுத்தாத தூய நெஞ்சக்காரர்!நீதியை ஏட்டளவில் ஏந்தி வந்த ஏவல்காரர் மட்டுமல்ல.., அதனை அமல்படுத்தி.., நெஞ்சத்து அடைத்த வன்நெஞ்சரையும் நெகிழ வைத்து நெடிதுயர்ந்த நீதிமான் அவர்..!!

அன்னாருடைய காலத்தில் நடந்த நிகழ்வொன்றின் இரத்தினச்சுருக்கம் இது:யூதர் ஒருவர், " உங்கள் அன்சாரித் தோழர் ஒருவர் என் முகத்தில் அறைந்துவிட்டார்" அந்த நீதிமானிடம் வந்தார். "அவரைக் கூப்பிடுங்கள்ஜீ"என்றார் அந்த நீதிமான்! (அவரிடம்) "இவரை முகத்தில் அறைந்தீரா?' என்று கேட்டார். அதற்குஅவர், "... நான் யூதர்களைக் கடந்துசென்றேன். அப்போது இவர் "மனிதர்கள் அனைவரையும் விட மூஸாவைத் தேர்ந்தேடுத்தவன் மீது சத்தியமாக!"என்று கூறக் கேட்டேன். உடனே நான், 'முஹம்மத் (ஸல்) அவர்களை விடவுமா? என வினவினேன். அப்போது எனக்குக் கோபம் ஏற்பட்டு இவரை அறைந்து விட்டேன்' என்றார். உடனே அந்த நீதிமான் "இறைத்தூதர்களிடையே என்னைச் சிறந்தவன் என்று சொல்லாதீர்கள். ஏனெனில், மக்கள் மறுமை நாளில் மூர்ச்சையடைந்து விடுவார்கள். மூர்ச்சை தெளி(ந்து எழு)பவர்களில் நானே முதல் ஆளாக இருப்பேன். அப்போது நான் மூஸா(அலை) அவர்களுக்கு அருகே இருப்பேன். அவர்கள் இறை அரியாசனத்தின் கால்களில் ஒன்றைப் பிடித்தபடி (நின்றுகொண்டு) இருப்பார்கள். அவர்கள் எனக்கு முன்பே மூர்ச்சை தெளிந்து (எழுந்து)விட்டார்களா? அல்லது 'தூர்' (சினாய்) மலையில் (இறைவனைச் சந்தித்த போது) அவர்கள் அடைந்த மூர்ச்சைக்குப் பகரமாக (இப்போது மூர்ச்சையாக்கப்படாமல்)விட்டுவிடப்பட்டார்களா? என்று எனக்குத் தெரியாது' என்று கூறினார்கள். அறிவிப்பாளர்:அபூஹுரைரா (ரலி) ஆதாரம்:புகாரி எண்:620

ஆம்..! முஹம்மத் (ஸல்) அவர்கள்தான், அந்த நீதிமான்..!
இங்கு முஹம்மத் (ஸல்) அவர்கள் தன்னை மற்ற தூதர்களை விட உயர்த்தி பேச வேண்டாம் என்று தடுப்பதை பார்க்கிறோம்.

சற்று சிந்தியுங்கள்...!

எந்த ஒரு மனிதனும் தனது சீடர்கள் தனக்கு சேவகம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் தன்னை முன்னிறுத்தி எதுவொன்றையும் தோற்றுவிக்கின்றான். ரவிசங்கர் முதல் ராம்தேவ் வரை சாய்பாபா முதல் சங்கராச்சார்யா வரை பிரேமானந்தா முதல் நித்தியானந்தா வரை அனைவரின் மனநிலையும் இதற்கு விதிவிலக்கல்ல..!

ஆனால் இங்கு நிலைமை தலைகீழ்..!ஒரு முஸ்லிம் தன் உயிரினும் மேலான முஹம்மத் (ஸல்) உயர்த்தி பேசி ஒரு யூதரை அடித்து விடுகிறார்.அந்த யூதரும் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் முறையிட்டால் நீதி கிடைக்கும் என்று நம்பி முறையிடுகிறார். முஹம்மத் (ஸல்) அவர்களும் தன்னைப் புகழ்ந்த முஸ்லிமை கண்டித்து மூஸா (அலை) அவர்களைவிட என்னை அதிகம் புகழாதீர்கள் என்று அந்த முஸ்லிமுக்கு அறிவுறுத்துகிறார்.

இதுதான் அந்த மாமனிதரின் வெற்றிக்கு அடிப்படை..!எங்கு தேடினாலும் இத்தகையதொரு ஆளுமைக்கு நிகராக ஏன் அதன் ஒரு பகுதியாகக்கூட எவரையும் பார்க்க முடியவில்லை வரலாறு முழுவதும்..!

மு.அ. அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw musavir2010@yahoo.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!

# தேசீய நலனின் அழகு.! முஸ்லிம்களின் பங்கு..!!



**தேசப்பற்றுக்கு எதிரானதல்ல இஸ்லாமிய வாழ்க்கைநெறி..!படைத்தவன் மீதான அச்சத்தை மிஞ்சிடக்கூடாது அதன் மீதான வெறி..!!தேசநலனின் அழகுக்கு முஸ்லிம்களின் பங்கு மெருகூட்டுகின்றது என்பது முற்றிலும் சரி..!!!**

*தேசநலன் காப்பதில் முஸ்லிம்களின் பங்கு என்பது பற்றி புகழ்பெற்ற இஸ்லாமிய சிந்தனையாளர் ஷேக் அகார் முஹம்மத் அவர்கள் இஸ்லாமிய மாநாட்டில் ஆற்றிய பேருரை இங்கு வசந்த வரிகளாய்..! (ஆ-ர்)*

தேசம்,தேசீயம் என்று கூறுகின்றபோது, தேசம்,தேசீயம்,நாடு,இனம்,மொழி முதலான அம்சங்கள் குறித்து இஸ்லாமிய வாழ்க்கைநெறி என்ன கூறுகின்றது எனும் பார்வையில் நோக்குவதும் அதனை நாம் புரிந்துகொள்வதும் மிக முக்கியமானதாகும். அடிப்படையில் ஓர் உண்மை இருக்கின்றது. அதாவது முஸ்லிம்கள் இனத்தால் இனம் காணப்படுகின்றவர்கள் அல்ல!அவர்கள் மொழியாலும் அடையாளப்படுத்தப்படுவதில்லை. தேசியத்தின் அடிப்படையில்கூட முஸ்லிம்களை அறிந்துகொள்ள முடியாது. மாற்றமாக,அவர்கள் கொள்கையின் அடிப்படையிலும்,அவர்கள் ஏற்றுக்கொண்ட மார்க்கத்தின் அடிப்படையிலும் இனங் காணப்படுகின்றவர்கள்.., அடையாள ப்படுத்தப்படுபவர்கள்..!சுருங்கக்கூறின், முஸ்லிம்கள் ஒரு கொள்கைவழி சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.



இதனால்தான், இறுதிமறை தன்னைப் பின்பற்றக்கூடிய முஸ்லிம்களைப் பற்றிய அடையாளத்தையும் அவர்களுக்கிடையிலான உறவைப் பற்றியும் சொல்லும்போதுபோது,மொழி-இனம்-தேசம் என்று எதனையும் முன்வைத்து அவர்களை அடையாளப்படுத்துவது கிடையாது. இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்கள். ஈமான் எனும் இறைநம்பிக்கைதான் அவர்களை இணைப்பது.இறைநம்பிக்கையின் தொடர்பும்-பந்தமும்தான் அவர்களைப் பிணைப்பது என்கின்றது அது!கொள்கை மாறுபடுகின்றபோது.., இஸ்லாம் என்கின்ற இந்த அடிப்படை இல்லாதபோது...,இரத்த உறவுகூட இந்த வாழ்க்கைநெறியில் புறந்தள்ளப்படுகின்றது.இரத்த உறவையே மிகைத்ததாக இந்த ஈமானிய-இறைநம்பிக்கை உறவு இருந்தாக வேண்டும் என்பதே இஸ்லாமிய வாழ்க்கைநெறியின் உன்னத நிலைப்பாடு எனில் அது மிகையல்ல!அதனால்தான் இஸ்லாமிய அழைப்பபை ஏற்க மறுத்துவிட்ட இறைத்தூதர் நூஹ் (அலை) அவர்களின் மைந்தனை "அவன்.., (நூஹ்)அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவன் அல்லன்!" என்று ஒதுக்கித் தள்ளச் சொன்னான் இறைவன்!

அண்ணலார் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் இறைக்கட்டளைப்படி (மக்காவிலிருந்து மதீனாவுக்கு) ஹிஜ்ரத் எனும் புலம்பெயர்தல் நிகழ்வை மேற்கொண்டபோது, தன்னைப் பின்பற்றிய நபித்தோழர்களுக்கிடையிலான உறவை கொள்கையின் அடிப்படையில்தான் உருவாக்கினார்கள்.இரத்த உறவுகளையும், குடும்பப் பந்தத்தையும் மிகைத்து முஹாஜிர்களையும்,அன்ஸார்களையும் சகோதரர்களாகப் பிணைத்தார்கள்.அவ்கள் ஒவ்வொருவரையும் பரஸ்பரம் இரத்தஉறவின் அடிப்படையில் பிணைந்த சகோதரர்களைப் போன்று மாற்றினார்கள்.

எனவே இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் இஸ்லாத்துக்கான இணைப்புக்கான,உறவுக்கான





அடிப்படை அம்சமாக இருப்பது இந்த இறைநம்பிக்கை கொள்கையை ஏற்றுக்கொள்வது அன்றி வேறில்லை.

இனம்,நாடு,மொழி,பிரதேசம்,தேசம், தேசீயம் ஆகியவற்றை வைத்து இஸ்லாம் எந்தவொரு அடிப்படையான முடிவுக்கும் தீர்மானத்துக்கும் வருவதில்லை.ஒரு முஸ்லிம் உடைய பார்வை சர்வதேசப் பார்வையாகவே அமையுமன்றி..,அமைய வேண்டுமேயன்றி., குறுகிய இன-தேச-தேசீயவாதத்துக்கு இஸ்லாத்தில் கிஞ்சுற்றும் இடமில்லை!எனவேதான் இஸ்லாம் இனம்-தேசம்-தேசீயம் எனம் கோட்பாடுகளை முன்வைப்பதில்லை.மாறாக, அவர்களை உம்மா... உம்மத் எனும் சர்வதேசப் பார்வை கொண்ட.., தொலைநோக்குப் பார்வை கொண்ட கோட்பாட்டை முன்வைக்கின்றது.

எனவே, இவ்வாறு இனம்,நாடு,மொழி,பிரதேசம், தேசம்,தேசீயம் என்று நோக்கும்போது நாம் மேற்சொன்ன அடிப்படை அம்சத்தைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இப்போது, நம் மனத்தில் ஒரு அதிமுக்கிய வினா எழக்கூடும்..!

அவ்வாறெனில் நாட்டுப்பற்றுக்கு இடமளிப்பதில்லையா இஸ்லாம்..?

இனஉணர்வுகளுக்கு மதிப்பளிப்பதில்லையா..?

தாய்மொழிப்பற்று கொண்டிருப்பதை பிழையெனக் கருதுகின்றதா..?

ஆம்..!இது நியாயமான கேள்வியே..!

இனம்,நாடு,மொழி,பிரதேசம்,தேசம், தேசீயம் ஆகியவற்றின் மீது ஒருவருக்கு பற்று என்பது ஒரு யதார்த்தம்-Fact மாத்திரமல்ல..,மாறாக.., இயல்பான ஒரு அடிப்படை அம்சமே..!இதனை இஸ்லாமிய வாழ்க்கைநெறி முற்றாக நிராகரிக்கவில்லை.

திருக் குர்ஆன் தீரமாக முழங்குகின்றது:

மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். 49:13

இங்கு இறைவன் தனது படைப்புக்களாகிய ஆண்-பெண் என்று இருப்பது எவ்வாறு யதார்த்த அம்சங்களோ.., அதுபோன்றே.., குலங்கள்,கோத்திரங்கள் என்று இருப்பதும் ஒரு யதார்த்த அம்சமே.., அவனுடைய நாட்டமே எனும் கருத்தின் அடிப்படையில் சொல்கின்றான்.

அதேபோன்று மொழி வேறுபாட்டையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்கின்றது..,ஆகுமான வழியில்..!அதாவது பல மொழிகள் இருப்பதும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்றாகவே திருக் குர்ஆன் பார்க்கின்றது.


எனவேதான், மனிதர்கள் தான் சார்ந்த இனத்துக்கு..,தான் பிறந்த மண்ணுக்கு..,தான் சார்ந்த தேசத்துக்கு.., தான் பேசுகின்ற மொழிக்கு என்பது போன்ற யதார்த்த அம்சங்களின்பால் பாசமுள்ளவர்களாக.., பற்றுள்ளவர்களாக இருப்பார்கள்.

அவ்வளவு ஏன்..?


உலகை உய்விக்க வந்த எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்றபட்டபோது, தான் பிறந்து வளர்ந்த அந்த புனித மண்ணை நோக்கி கூறினார்கள்: "ஓ.., மக்காவே..!இந்த நானிலத்தில் அல்லாஹ்வுக்கு சொந்தமான இந்த பூமியில் எனக்கு மிக மிக விருப்பமான பூமி நீயேதான்..!நாடு நீயேதான்..!!நான் பிறந்து வளர்ந்த பூமி இது..! ஆனால் இந்த மக்கள்

**இனம்,நாடு,மொழி,பிரதேசம்,தேசம், தேசீயம் ஆகியவற்றின் மீது ஒருவருக்கு பற்று என்பது ஒரு யதார்த்தம்-குயஉவ மாத்திரமல்ல..,மாறாக.., இயல்பான ஒரு அடிப்படை அம்சமே..!இதனை இஸ்லாமிய வாழ்க்கைநெறி முற்றாக நிராகரிக்கவில்லை.**

என்னை வெளியேறிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கின்றார்கள்.ஆனால், இந்த மக்கள் என்னை வெளியேற்றும் இந்த நிலைமைக்கு தள்ளாதிருந்தால்...,திண்ணமாக.., இந்த மண்ணிலிருந்து...,உனது இந்த பூமியிலிருந்து நான் வெளியேறுவேனா என்ன..?" என்று அங்கலாய்க்கின்றார்கள்.அந்த அளவுக்கு தனது வெளிப்படும்போது அதனை ஜாஹில்லிய்யத் - அஞ்ஞானம் என சாடுகின்றது. மனிதநேயத்தை,சகோதரத்துவத்தை மிகைத்ததாக.., மனித இனத்துடனான சகோதரத்துவம்-சமத்துவம் முதலான அடிப்படைகளை மிகைத்ததாக.., மனித விழுமியங்களை மிகைத்ததாக., இந்த யதார்த்த உணர்வுகள் மேலோங்கி நிற்கும்


மவுலானா அபுல் கலாம் ஆஸாத்

**இவர்களெல்லாம் தத்தமது நாடுகளிலே வாழ்ந்த மக்களுக்கு இனஉணர்வூட்டினார்கள்.நாட்டுப்பற்றை கற்றுத் தந்தார்கள். நாட்டுக்காக, இனத்துக்காக,மொழிக்காக பேச வேண்டும்.., போராட வேண்டும் என்ற உணர்வையெல்லாம் வளர்த்தார்கள்..!**


கான் அப்துல் கஃபார் கான்

பிறந்தக-தாயகத்தின் மீது முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றும் பாசமும் கொண்டவர்களாக இருந்தார்கள்.

நேர்வழி நடந்த நபித்தோழர்களும் ஹிஜ்ரத் சென்ற பின்னரும், தமது பிறந்த மண்ணை எண்ணி ஏக்கம் கொண்டார்கள்.தாம் தாயகம் திரும்பும் பொன்வேளைக்காக ஏங்கினார்கள். இத்தகைய ஆகுமான யதார்த்த உணர்வுகளை இஸ்லாம் மதிக்கின்றது.., ஏற்றுக்கொள்கின்றது. ஆனால், இந்த உணர்வுகளும் இவை சார்ந்த நாடு,இனம்,மொழி,தேசம்,தேசீயம் பற்றிய உணர்வுகளும் வெறியாக வெளிப்பட்டுவிடக்கூடாது. அத்தகைய வெறித்தனம் என்றிருந்தால்..,அதனை இஸ்லாம் ஏற்றுக்கொள்ள தயாரில்லை..! அதுமட்டுமல்ல, அது இஸ்லாமிய வாழ்க்கைநெறிக்கு முரணாண கோட்பாடாகவே கருதுகின்றது.





உலக வரலாறுகளை சற்றுப் புரட்டிப் பாருங்கள்!முஸ்லிம்கள் தங்கள் நாடு,மொழி உள்ளிட்ட பல அம்சங்களின் வளர்ச்சிக்காக உழைத்திருக்கின்றார்கள்.., பாடுபட்டிருக்கின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் உங்களுக்கு விளங்கும்.இந்தோனேஷிய முஸ்லிம்கள் தங்களது நாட்டை.., இனத்தைத் துவம்சம் செய்ய வந்த உள்ளாந்தர்களுக்கு எதிராகப் போராடினார்கள். சிரிய முஸ்லிம்கள் பிரான்சுக்கெதிராக கச்சை கட்டி நின்றார்கள்.இந்திய முஸ்லிம்கள் ஆங்கிலேய சர்வாதிகாரத்துக்கு எதிராக சாட்டை ஏந்தி நின்றார்கள்.

இஸ்லாமிய உலகம் கண்ட பெரும்பெரும் அறிஞர்கள்.., முஸ்லிம்களுக்கு மத்தியில் இனஉணர்வை,சமூக விழிப்பு உணர்வை..,மொழிப்பற்றைத் தோற்றுவித்தார்கள். ஜமாலுத்தீன் ஆ.ப்கானியை எடுத்துக்கொள்ளுங்கள். எகிப்தில் தோன்றிய முஹம்மத்-பின்-அப்துவை எடுத்துக்கொள்ளுங்கள்!இந்தியாவில் தோன்றிய மவுலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள்.இந்தோனேஷியாவின்

**இலங்கையில் முஸ்லிம் முன்னோர்களும் தேசநலனுக்காக தம் மகத்தான பங்களிப்பை செய்திருக்கின்றார்கள்.**

அஹ்மத் தெஹ்லான்!

இவர்களெல்லாம் தத்தமது நாடுகளிலே வாழ்ந்த மக்களுக்கு இனஉணர்வூட்டினார்கள். நாட்டுப்பற்றை கற்றுத் தந்தார்கள். நாட்டுக்காக, இனத்துக்காக,மொழிக்காக பேச வேண்டும்.., போராட வேண்டும் என்ற உணர்வையெல்லாம் வளர்த்தார்கள்.இலங்கையில் முஸ்லிம் முன்னோர்களும் தேசநலனுக்காக தம் மகத்தான பங்களிப்பை செய்திருக்கின்றார்கள்.

ஆனால்..,தான் வலியுறுத்தும் உன்னத அடிப்படை அம்சங்களைக்,கொள்கை-கோட்பாடுகளை மிகைத்ததாக இந்த உணர்வுகள் தலைதூக்கிவிடக் கூடாது என்பதில்தான் இஸ்லாம் மிகக் கவனமாக இருக்கின்றது.

**இந்திய முஸ்லிம்கள் ஆங்கிலேய சர்வாதிகாரத்துக்கு எதிராக சாட்டை ஏந்தி நின்றார்கள். இஸ்லாமிய உலகம் கண்ட பெரும்பெரும் அறிஞர்கள்.., முஸ்லிம்களுக்கு மத்தியில் இனஉணர்வை,சமூக விழிப்பு உணர்வை..,மொழிப்பற்றைத் தோற்றுவித்தார்கள்...!**





அவ்வாறேதான்.., இஸ்லாமிய மார்க்கம் சகோதரத்துவம்,சமத்துவம்,மனிதநேயம்,மனித விழுமியங்கள் எனும் பார்வையைத் தந்ததாலும், அனைத்துப் படைப்பினங்களும்.., மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம் எனும் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலில் உருவான சமூகம் என்பதாலும் முஸ்லிம்சமூகம் இவ்வாறுதான் நடக்கும்.

அண்ணலார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் இந்த பிரார்த்தனை புரிந்ததாக, முஸ்னத் அஹ்மத் மற்றும் ஸுனன் அபூதாவூத் ஆகிய நபிமொழிக் கிரந்தங்கள் மொழிகின்றன: “எனது இறைவனே..! அனைத்தினதும் இறைவனே..!!முஹம்மத் உனது அடிமை என்னும், உன்னுடைய தூதர் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்.எனது இறைவனே..! அனைத்தினதும் இறைவனே..!!மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்.”

இவ்வாறு ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் இறைவனை விளித்து,மனிதர்கள் அனைவரையும் சகோதரர்களாக்கி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிரார்த்திக்கும் அளவுக்கு மனித சகோதரத்துவத்தைப் போதித்த மகாத்மிய மார்க்கம் இஸ்லாம்!

இத்தகைய உன்னத கருத்தைப் போற்றி வாழும் சமுதாயம் மனிதநலனில் பெரும் அக்கறை கொண்டதாகவே இருக்கும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.இந்த முஸ்லிம் சமுதாயம் தன்னலம் பார்க்காது, பிறருக்காக..,பிறர் நலனுக்காக..,பிறருடைய வாழ்க்கைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்காகவென்றே உருவாக்கப்பட்ட சமுதாயம்!

இஸ்லாமிய வாழ்க்கைநெறியை ஏற்றுக்கொண்ட தனிப்பட்ட மனிதர் ஒவ்வொருவரும் பிறருக்கென தம் வாழ்வை அர்ப்பணித்து வாழும் மனிதராகவே இருப்பர்..!

ஒரு இதழ் விட்டு மறு இதழில் முடியும்
இறைநாடின்..!

# “களம் விசாலமானது..! பணி முக்கியமானது..!!“



இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் புத்தளத்தை சார்ந்தவர்.உயர்நிலை-ஷரீஆ கல்வியை இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரியில் பயின்று,பேராதணை பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டத்தைப் பெற்றார்.ஜமாஅத்தே இஸ்லாமி இயக்கத்தின் வடமேற்கு மாகாணப் பொறுப்பாளராக இருந்து தற்போது அவ்வியக்கத்தின் மத்திய மஜ்லிஸ் ஷுஅராவின் உறுப்பினராகவும் உள்ளார்.தான் பயின்ற இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரியிலேயே பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.அண்மையில் குறுகிய கால விஜயமாக குவைத் வந்த அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.வசந்தம் இதழுக்காக அவருடைய பிரத்யேக பேட்டி எழுத்து வடிவில்..!

இலங்கையில் அழைப்புப் பணியைப் பொறுத்த வரை போருக்கு முன்.., போருக்குப் பின் என இரு நிலைகளில் எவ்வாறு பார்க்கின்றீர்கள்..?

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை தொடர்புபடுத்தித்தான் இதனைப் பார்க்க முடியும். அரபியர்களும் வாழ்ந்ததாக ஆதாரம் இருக்கும் இலங்கைப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் பூர்வீகக் குடிமக்களாக இருக்கின்றார்கள்.அவர்கள் மிகக் கவுரவமாக நடத்தப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

குறிப்பாக உமய்யா கலீஃபா அப்துல் மலீக் ஆட்சிக் காலத்தில் இதற்குரிய ஆதார அம்சத்தைக் காண முடியும்.பின்னர் ஆங்லேய மற்றும் போர்த்துக்கீசிய ஆதிக்கம் ஏற்பட்டது.இதற்கு,வணிகரீதியான காரணம் இருப்பினும் கிறித்துவப் பிரச்சாரமும் பிறிதொரு காரணியாக இருந்தது.அப்போது இலங்கையில் இருந்த இந்துக்கள்இபவுத்தர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் அவர்தம் பாதுகாப்புக்காக 1815-இல் மதப்புணரமைப்பு இயக்கங்கள் தோன்றின.இவற்றைப் பொறுத்தவரை தனித்தனியான இனங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு நிலை இலங்கையில் உருவாயிற்று.

சிங்கள இயக்கத்தை

> இப்போது மூடப்பட்டிருந்த சமூகங்கள் மத்தியில் வாயில்கள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன.

தர்மபாலாவும்,ஆறுமுகநாவலர் தமிழர்களுக்கான இயக்கத்ததையும் ஆரமபிக்க, சித்தி லைப்பை அவர்களின் முயற்சியால் இஸ்லாமிய இயக்கம் ஆரம்பமானது.பூர்விகக் குடிமக்களாகக் கொள்ளப்பட்ட இம்மூன்று அமைப்பினரும் கிறித்துவப் பிரச்சாரத்திலிருந்து தத்தமது இயக்கத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவையில் இருந்தனர்.

இங்கு கவனிக்கத்தக்க அம்சம் என்னவெனில்,ஆசியாவின் பிற தேசங்களில் தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்த இயக்கங்கள் அனைத்தும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக,அரசியல் இயக்கங்களாக உருவெடுத்துக் கொண்டிருக்க, விதிவிலக்காக இலங்கையில் மட்டும் மதஇயக்கங்கள் முதலில் உருவெடுத்து பின்னர் அவை அரசியல் இயக்கங்களாக மாறத் தொடங்கின.இதன் பின்னணி மதங்களுக்கிடையிலான முரண்பாட்டை அப்போதே தோற்றுவித்திருந்தது.இதனை ஆங்கிலேயர்கள் தமது இருப்புக்காக அழகாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இந்த சமயத்தில் 1815-இல் ஆங்கிலேய சூழ்ச்சியால் சிங்கள-முஸ்லிம் கலவரம் ஏற்பட்டது.மதரீதியான கலவரமாக அதற்கு உரு கொடுத்து பின்னர் தங்களுக்கு அரசியல் இலாபம் தேடும் அம்சமாக அதனைப் பயன்படுத்திக் கொண்டனர் ஆங்கிலேயர்கள். சுருங்கக்கூறின் சமூகங்களுக்கு மத்தியிலான உறவுகள் பெரிய அளவில் இருக்கவில்லை. எனவே, அழைப்புப் பணிக்கான முகாந்தரம் அங்கு பெரிதாக அப்போது இருக்கவில்லை.

இதற்கிடையில், சிங்கள-தமிழ் குழுக்களிடையே எழுந்து வந்த கருத்து வேறுபாடுகளை முன்னிறுத்தி சுதந்தரத்தை தாமதப்படுத்தி வந்தது ஆங்கிலேய அரசாங்கம்.

அப்போது முஸ்லிம் தலைவர்கள் இரு குழுவினரிடையேயும் நடுநிலையாக நின்று "முதலில் சுதந்தரம் பெறுவோம்!உள்நாட்டுப் பிரச்னையை பின்னர் எமக்குள் பேசி முடிவு செய்துகொள்வோம்" எனும் முடிவை முன்வைத்து சுதந்தர இலங்கைக்கு அடித்தளம் அமைத்தனர். அதனால்,சுதந்தரப் போராட்டத்தில் அனைத்து சமூகங்களும் கலந்துகொண்டு விடுதலை இலங்கையைப் பெற்ற பின்னர் நிலைமை மாறியது.

பின்னர், தலைதூக்கிய குழப்பங்களால், 1980-இல் இலங்கை மிகப்பெரிய இனக்கலவரத்துக்குத் தள்ளப்பட்டது.அன்றிலிருந்து முஸ்லிம் சமூகம் பாக்குவெட்டிக்கு மத்தியில் சிக்கிய பாக்கு போன்றுதான் இரு பிரிவினர் மத்தியிலும் சிக்கியிருந்தனர்.

கால் நூற்றாண்டு கழிந்து யுத்த முடிவு ஏற்பட்ட பின்னர், இப்போது மூடப்பட்டிருந்த சமூகங்கள் மத்தியில் வாயில்கள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. கடந்தகால வரலாற்றுப் பதிவுகளும் இல்லாமல் இல்லை.எனினும் அழைப்புப்பணிக்கான களம் பரந்து கிடக்கின்றது.இறையருளால் இதனைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அழைப்புப்பணிக்கான களம் பரந்து கிடக்கின்றது.இறையருளால் இதனைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

**இன்றைய இலங்கை சமூக சூழலில் இளைஞர்களுக்கும் அழைப்புப்பணிக்கான களத்துக்கும் இடையிலான தொடர்பு எப்படி?குறிப்பாக இஸ்லாமிய இயக்கத்துக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும்..!**

கடந்த அக்டோபரில் நடந்த தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுத் தலைவர்கள் மேடையில் இளைஞர் சமூகத்தினரின் அதிக எண்ணிக்கையைக் கண்டு பிற நாட்டு இஸ்லாமிய இயக்கங்களோடு ஒப்பிடுகையில் இங்கு நரைத்த முடியினரை அதிகம் காண முடியவில்லை என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தனர்.அதனையும் மீறி இளைஞர்கள் இயக்கத்தில் முதியோர் ஆதிக்கம் தென்படுவதாக இருப்பது இயல்பே.

புதிய கல்விக்கொள்கை,கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்கள் இவற்றையும் தாண்டி இளைஞர்களை இயக்க ரீதியாக இணைக்கும் வகையில், பாலர் பாடசாலைகள், ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்கள்,1980-இல் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய இயக்க மாணவர் அமைப்பு,இயக்க பாலர் அமைப்பு, இதுதவிர ஏனைய இயக்கங்களில் இருக்கும் இளைஞர்களும் பொதுவான அம்சங்களில் தேவையான கவனம் செலுத்தி வருகின்றனர்

ஒப்பீட்டு அளவில் பார்த்தால்,



திருப்தியோ அதிருப்தியோ படாத அளவில் அனைத்து இயக்கங்களிலும் அழைப்புப் பணிக்களத்தில் இஸ்லாமிய உணர்வு ரீதியான இளைஞர்கள் நியாயமான அளவில் இருக்கின்றார்கள்.

**பொதுவாக நோக்கினால் ஆசிய நாடுகளைப் பொருத்தவரை இஸ்லாமிய இயக்கத்தின் கொள்கை கோட்பாடுகள்தான் இன்று இருக்கின்ற ஏராளமான அழைப்புப்பணிக் களத்தாருக்கும் அடிப்படை என சொல்ல முடியும்.பல்வேறு தரப்பினரும் பங்கு கொண்டிருக்கும் இன்றைய அழைப்புப் பணிக்களத்தில் இஸ்லாமிய இயக்கம் குறிப்பிட்டு என்ன செய்கின்றது..?**

இறைநாடின் ஒரு இதழ்விட்டு மறுஇதழில்...!

# அறக் கண்காட்சியில் இஸ்லாமிய நிலைய மகளிர் பிரிவு..!



இஸ்லாமிய நிலையம் ஜீஊ கேதான் மகளிர் மகளிர் கிளையில் கற்கை நெறி நிறைவு சான்றிதழ் வழங்கும் விழாவின்போது, பயிற்சிப் பாடங்கள் முடித்த புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய சகோதரிகள்..!

குவைத்தில் ஸுர்ரா பகுதியில் அமைந்த அப்துல்லாஹ் முபாரக் அரங்கில் அழகிய அறக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.இஸ்லாமிய நிலையம் ஜீஊ மகளிர் பிரிவின் சார்பில் மகளிர் அழைப்புப் பணியாளர்கள் கலந்துகொண்டு கள அழைப்புப்பணியில் ஈடபட்டனர்.பல்வேறு மொழிகள் சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

இஸ்லாமிய அழைப்பியல் சாதனங்கள் துணைகொண்டு மக்களுக்கு சத்தியத்தை எடுத்தியம்புவது இஸ்லாமிய நிலையத்தின் அரும்பணிகளில் தலையாயது என்று கூறுகின்றார் மகளிர் தலைமை நிலைய ஊடகத்துறை பொறுப்பாளர் சகோதரி ஆயிஷா அபூரஹ்மா தெரிவித்தார்!

# கற்கைநெறி சான்றிதழ் வழங்கு விழா..!



இலங்கை,இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியரான ஷேக் முஹம்மத் ஹுஸைர் அவர்கள் குவைத் விஜயத்தின்போது,இலங்கை மக்களுக்கான இஸ்லாமிய நிலைய கிளையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது..!

# விருந்தினர் நிகழ்ச்சி..!







# மனம் எப்படி..,மனிதன் அப்படி..!

**மனம் காட்டும் மாயையில் உழல்வோர் ஏராளம்..!அதன் கவர்ச்சியில் தம்மை அவர்கள் இழப்பது தாராளம்..!!மனத்தை உண்மையான சிந்தனையுடன் செலுத்தி நடைபோட்டால் மனித ஆளுமை பாராளும்..!**

நமது மனம் எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் அது உலகையும் உணர்கிறது. மனம் உலகை எப்படி உணர்கிறதோ, அப்படித்தான் உலகம் நம்மைப் பிரதிபலிக்கிறது. குழப்புகிறதோ?
மிகவும் எளிது..!

நீங்கள் உற்சாகமாய், “குட் மூடில்“ இருக்கிறீர்கள் என்றால், நீங்களும் மற்றவர்களிடம் அன்பாய், இனிமையாய், நகைச் சுவையாய்ப் பேசுவீர்கள்..! பதிலுக்கு அவர்களும் உங்களிடம் அப்படியே பிரதிபலிப்பர். நீங்கள் சிரித்து நண்பரின் முதுகைத் தட்டினால் அவர் கத்தி எடுத்துக் கொண்டு உங்களைக் குத்த வரப்போவதில்லை. பதிலுக்கு அவரும் சிரித்தாக வேண்டும். உலகமே அன்று உங்களுக்கு மகிழ்ச்சியாய், இனிதாய்த் தோன்றும்.

> நாம் சந்தித்த வெற்றி, தோல்வி, நம்மைப் பற்றி நாம் நினைப்பது, மற்றவர்களைப் பற்றி நம் மனதில் ஏற்படும் அபிப்ராயம், மற்றவர்கள் நம்மிடம் நடந்து கொள்ளும் முறை, இவையெல்லாம் நம்முடைய சுயபிம்பம் உருவாகும் காரணிகள்..!

நீங்கள் உற்சாகம் குன்றி, வருத்தத்திலும் அழுது வடியும் முகத்துடனும் இருந்தால்? பொறுமைசாலியான நண்பராய் இருந்தால், ஒரு சிங்கிள் டீ வாங்கிக் கொடுத்து உங்கள் சோகக் கதையைக் கேட்டுவிட்டு எஸ்கேப் ஆகலாம். அல்லது, தூரத்திலிருந்தே உங்களைப் பார்த்துவிட்டு ஓடும் பஸ்ஸில் ஃபுட்போர்டில் தாவி ஏறி ஓடிவிடலாம். அதைக் கண்டால் மேலும் சோகம் பெருகி, மேலும் வருத்தப்பட்டு... கஷ்டம்...!

நம்மைப் பற்றி நம் மனதிலுள்ள சுயபிம்பம்தான், நாம் எப்படி நடந்துகொள்ளப் போகிறோம் என்பதை நிர்ணயிக்கிறது. அதன் அடிப்படையில் தான் நாம் யாரிடம் பழகப் போகிறோம், என்ன செய்யப் போகிறோம், அல்லது செய்யாமல் இருக்கப் போகிறோம் என்பது நிர்ணயிக்கப்படுகிறது..!



சரி, நம்மைப் பற்றிய பிம்பம் நமக்குள் எப்படி உருவாகிறது? அது நமது அனுபவங்களின் கலவை. நாம் சந்தித்த வெற்றி, தோல்வி, நம்மைப் பற்றி நாம் நினைப்பது, மற்றவர்களைப் பற்றி நம் மனதில் ஏற்படும் அபிப்ராயம், மற்றவர்கள் நம்மிடம் நடந்து கொள்ளும் முறை, இவையெல்லாம் நம்முடைய சுயபிம்பம் உருவாகும் காரணிகள். அதை மனம் நம்புகிறது. அந்த பிம்பத்தின் கட்டுமானததிற்குள்ளேயே நம்முடைய வாழ்க்கையை அது அமைத்துக் கொள்கிறது.

அந்த சுயபிம்பம் தான், இந்த உலகத்தை நாம் எந்தளவு நேசிக்கப் போகிறோம், அதில் வாழ என்னென்ன முயற்சி எடுக்கப் போகிறோம் என்பதையும், நாம் வாழ்க்கையில் எதை சாதிக்கப் போகிறோம் என்பதையும் நிர்ணயிக்கிறது. நாம் யார் என்று நினைக்கிறோமோ அது தான் நாம்!

அந்த சுயபிம்பம் நம்மை எப்படி வடிவமைகிறதோ அது தான் நாம்!

எனவே, சுயபிம்பங்களை சரியாக வடியுங்கள்..!வாழ்வை வெல்லுங்கள்..!!



# இருமை போற்றும் இறுதி நபியின் இனிய வருகை..!

**பாலைவனத்தில் தோன்றிய ஓர் அழகு ரோஜாவாய் மிளிர்ந்தது அவர்தம் ஆளுமைக் கலை!மழலையாக,சிறுவனாக,இளைஞனாக என்று வாழ்நாளின் ஆரம்பகட்டங்களிலும் சரி,நடுத்தர வயதில் இறைத்தூதராக,பண்பட்ட மூத்தவராக என்று வாழ்வின் அடுத்த கட்டங்களிலும் ஒவ்வொரு படித்தரங்களைக் கடந்தபோதும் அவர்தம் வாழ்வு அதிசயங்களும் அற்புதங்களும் நிறைந்து நெகிழச் செய்தது வரலாற்றின் ஏடுகளை..!உலகம் இன்றும் வியந்து நெகிழ்ந்து போற்றுகின்றது அவர்தம் பணிச்சேவைகளை..!**

*தான் பிறந்த மண்ணில் எவரிடமும் காணப் பெற்றிராத வகையிலான ஒழுக்கம்,வாய்மை,நம்பிக்கை,சகிப்புத் தன்மை,தூய மனப்பாங்கு,அன்பு,கருணை என்று உன்னத குணநலன்களின் பொக்கிஷமே வரையின்றி அவரிடம் வாரிக் காணப்பட்டது.அதனால்தான் இந்த மகாத்மாவை பின்னர் திருக் குர்ஆன் இவ்வாறு புகழ்ந்துரைத்தது:*திண்ணமாக நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர். 68:4

*அன்னாருடைய பண்புநலன்கள் தன்னைக் கட்டிப் போட்டிருந்ததால்தான், அவருடைய சிறிய தந்தையின் அன்பும் அரவணைப்புடன் கூடிய தனிப்பட்ட கவனமும் அதிகரித்துக் கொண்டே சென்றது.*

*வளர்ந்து வாலிபரான வணிகர் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆற்றலினாலும்,சிறந்த நம்பிக்கையினாலும் கவரப்பட்ட குறைஷ் எனும் உயர்குலப் பெண்மணி கதீஜா அவர்கள் முறையாக திருமணத் தூது அனுப்பி மணக்கின்றார்கள். அப்போது அம்மையாருக்கு வயது 40, அண்ணலாருக்கு வயது 25!*

*சிறந்த கணவனாக,குடும்பத் தலைவனாக பின்னர் அன்புத் தந்தையாக கூடுதல் தகுதிகளை வளர்த்துக்கொண்ட அதேவேளை, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறைவன் மீதான தியான உணர்வினால், தொலைவில் உள்ள ஹிரா மலைக்கு சென்று தனிமையில் தியானத்தில் ஈடுபட்டார்.*

*அத்தகைய வேளை ஓர் நாள், அவருக்கு இறைத்தூதர் எனும் உயர் தகுதி வழங்கப்பட்ட செய்தி வானவர் தலைவர் மூலம் வழங்கப்படுகின்றது.ஏக இறைவனான அல்லாஹ்விடமிருந்து பெறப்பட்ட இந்த இறைசெய்தியாகிய-வஹீ அன்றிலிருந்து சுமார் 23 வருடங்கள் வரை கால இடைவெளிவிட்டு அவர் மீது இறங்கிற்று.அதன் முழு தொகுப்பே, இறைபாதுகாப்புடன் இன்றுடன் ஒளிவீசிக் கொண்டிருக்கும் திருக் குர்ஆன்!*

**இறைபாதுகாப்புடன் இன்றுடன் ஒளிவீசிக் கொண்டிருக்கும் திருக் குர்ஆன்!**

*முதலில் அன்பு மனைவி, பின்னர் உற்றார்-உறவினர்,பின்னர் மறைமுகமான முறையில் நண்பர்கள் என்று*

தொடங்கி பின்னர் ஏகஇறை உத்தரவின்படி பகிரங்கமாக என்று தனது தூதுச் செய்தியை அவர் வழங்கிய பாணி தன்னிகரற்றது.சொந்த-பந்தங்களினால் தான் பிறந்த மண்ணைவிட்டே அகற்றப்பட்டார்.அண்டை நகரமான மதீனா ஆரத் தழுவிக் கொண்டது அவரை மட்டுமல்ல, அவரது கொள்கையாகிய "வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு எவரும் இல்லை,முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய இறுதி இறைத்தூதர் ஆவார்கள்" எனும் ஏகத்துவ முழக்கத்தையும் அதனுடன் இயைந்த வாழ்வியல் நடைமுறைகளையும்தான்!அந்த வாழ்க்கை இம்மையை மட்டுமல்ல,நிரந்தர மறுமையையும் சேர்த்தே பேசியது.

அன்னாருக்கு தூதுத்துவப் பட்டம் கிடைக்கப் பெற்றபோது அவர்தம் வயது 40-இதிலிருந்து ஆரம்பித்து மரணம் வரை அந்த நாயகனின் வாழ்க்கையை இப்படிப் படம் பிடிக்கலாம்:-

44 வயதில்

தன் மீதும் முதல் இறைநம்பிக்கை யாளர்கள் மீதும் மக்கா எதிர்ப்பாளர்களின் துன்புறுத்தல் அதிகமாதல்.

45 வயதில்

இறைத்தூதரின் கட்டளைப்படி இரு குழுக்களின் முதல் ஹிஜ்ரத் எத்தியோப்பியாவை நோக்கிப் பயணம்.

47 வயதில்

அபூ தாலிப் பள்ளத்தாக்கிற்கு விரட்டப்படுகிறார்கள். புகலிடம் அளித்ததற்காக பனூ ஹாஷிம்,பனூ முத்தலிப் கூட்டத்தினரும் ஊர் விலக்கம் செய்யப்பட்டனர்.

50 வயதில்

அவருக்கு பெரும் துணையாக இருந்த சிறிய தந்தை அபுதாலிபும் அருமை மனைவி கதீஜாவும் மரணமடைகிறார்கள். நபி(ஸல்) அவர்களுக்கு அது துக்க ஆண்டாகவே இருந்தது.

51 வயதில்

மக்காவிற்கு வெளியே தன் பிரச்சாரத்தை துவங்கி தாஈஃப் செல்கிறார்கள். அங்கு கடினமான தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். மக்காவிற்கு வெளியில் சந்தை கூடும் இடங்களுக்கு வரும் மக்களையும் ஹஜ்ஜுக்கு வரும் மக்களையும் சந்தித்து பிரச்சாரம் செய்கிறார்கள். மதீனாவில் இஸ்லாமிய சிந்தனை எட்டுகிறது. ஆயிஷா (ரலி) அவர்களுடன் திருமணம் நடைபெறுகிறது

52 வயதில்

மக்காவிலிருந்து விண்வெளிப் பயணம்!தொழுகை கடமையாகிறது.

53 வயதில்

இரண்டாவது பைஅத்துல் அகபா நடைபெறுகிறது.

முதல் குழுவாக முஸ்லிம்களும் தொடர்ந்து இறைத்தூதரும் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் பயணம். இஸ்லாமிய புதிய வரலாற்றுக்கான துவக்கம். அமோக வரவேற்புடன் மதினாவின் புதிய சாசனம் வரையறுக்கப்படுகிறது.

54 வயதில்

பத்ரு யுத்தம், இறை நிராகரிப்பவர்கள் 1000 பேரை முஸ்லிம்கள் 313 பேர்கள் யுத்தகளத்தில் சந்தித்து வெற்றிப் பெறுகிறார்கள். (ஹிஜ்ரி: 2)

55 வயதில்

உஹத் யுத்தம், 3000 இறை நிராகரிப்பவர்களை 700 முஸ்லிம்கள் களத்தில் சந்திக்கிறார்கள். சில காரணங்களால் முஸ்லிம்களுக்கு நிறையஇழப்பு. (ஹி:3)

58 வயதில்

பனு முர்ரா, கத்பான், கிஸ்ரா கோத்திரங்கள் அடங்கிய 10,000 பேர்களுடன் 3000 முஸ்லிம்கள் போர் செய்கின்றனர். இதுதான் (கந்தக்) அகழ் யுத்தம். இதில் முஸ்லிம்களுக்கு வெற்றி.(ஹி: 5)

59 வயதில்

தனது 1400 தோழர்களோடு உம்ரா செய்ய மக்கா செல்ல ஹுதைபியா என்ற இடத்தில் மக்காவின் இறை நிராகரிப்பவர்களால் தடுக்கப்பட்டு ஹுதைபியா உடன்படிக்கை நடக்கிறது.(ஹி: 6)

60 வயதில்

கைபர் போர் யூதர்களுடன்.! முஸ்லிம்கள் வெற்றி பெறுகிறார்கள். (ஹி: 7)

61 வயதில்

கத்தியின்றி.இரத்தமின்றி யுத்தம் எதுவுமின்றி முஸ்லிம்கள் தம் சொந்த மண்ணான மக்காவை வெற்றிக் கொள்கிறார்கள்.(ஹி: 8)

62 வயதில்

முஸ்லிம்களை ஒழிக்க 40,000 ரோமர்கள் தபூக் வருகிறார்கள், இவர்களை 30,000 முஸ்லிம்கள் எதிர்த்துப் போராடி பெரும் வெற்றி பெறுகிறார்கள்.(ஹி: 9)

63 வயதில்

ரபிவுல் அவ்வல் பிறை 12-இல் தனது இறைத்தூதர் பணியை நிறைவு செய்து மரணமடைகிறார்கள். (இன்னாலில்லாஹி..!)

**அந்த வாழ்க்கை இம்மையை மட்டுமல்ல,நிரந்தர மறுமையையும் சேர்த்தே பேசியது..!**



# இலாபம் பெருகும் பங்கு வணிகம்..!

**நஷ்டமே இல்லாத வணிகம் எங்கு இருக்கும்..? அதன் தாக்கம் எப்படி ஆளும்..? உலகம் அதனை எப்போது உணரும்..? ஆம்.., ஏகஇறையை அறிந்துகொள்ளாத ஏழ்மை சிந்தனை மனிதனை, பணக்கார சிந்தனையுடைய ஏகஇறைக்கொள்கைவானாக அது ஒருநாள் மாற்றும்..!**

*இங்கிலாந்து நாட்டவரான சகோதரர் இத்ரீஸ் தவ்ஃபீக் கிறித்துவ (ரோமன் கத்தோலிக்கர்) பாதிரியாராக இருந்து, சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாத்தைத் தம் வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொண்டவர். அவர் தற்சமயம் சிங்கப்பூரில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். முதல்நாள் சொற்பொழிவின் கேள்வி-பதில் நேரத்தில் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் சிறு கட்டுரை வடிவில்....!*

இரண்டே வார்த்தைகளில் தஃவா-அழைப்புப்பணி செய்ய முடியுமா?

"முடியும்" என்கிறார் சகோதரர் இத்ரீஸ் தவ்ஃபீக். அவருடைய மனமாற்றத்திற்குக் காரணமாக இருந்தது ஒரு சிறுவனின் வார்த்தைகள்.!

"ஒரு சிறுவனின் மூலமாகத்தான் எனக்கு இஸ்லாம் அறிமுகமானது. கெய்ரோ நகர வீதி ஒன்றில் ஷூ பாலிஷ் செய்பவன் அவன். விடுமுறைக்காக எகிப்து வந்திருந்த நான், ஒருநாள் வீதியில் அவனைச் சந்தித்தபோது, வெள்ளைக்காரனாகிய என்னைப் பார்த்து முகமலர்ச்சியுடன், 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றான் அவன். 'உங்கள் மீது சாந்தி நிலவட்டும்' என்ற இந்த வார்த்தைகள் அவனுடைய உள்ளத்திலிருந்து வந்தது என்பதை நான் உணர்ந்தேன்"

"முதன் முதலாக எகிப்திற்குச் சென்றிருந்த நான், சில அரபிச் சொற்களை கற்று வைத்திருந்தேன். அடுத்த நாள் அந்தச் சிறுவன் இருக்கும் வீதியில் சென்றபோது, 'எப்படி இருக்கிறாய் நண்பனே?' என்று அரபியில் கேட்டேன். அவன் அதே முகமலர்ச்சியுடன் 'அல்ஹம்து லில்லாஹ்' என்றான். எல்லாப் புகழும் இறைவனுக்கே!"

"அதற்குமுன் நான் பல முஸ்லிம்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் யாரும் என்னிடம் பேசியதில்லை. என் உள்ளத்தைத் தொடும் வகையில் என்னிடம் பேசிய முதல் முஸ்லிம் அந்தச் சிறுவன்தான். முஸ்லிம்கள் என்றால் குண்டு வைப்பவர்கள், கையை வெட்டுபவர்கள், பெண்களைக் கொடுமைப்படுத்துபவர்கள் என்றெல்லாம் ஊடகங்கள் என் மனதில் உருவாக்கி வைத்திருந்த பிம்பத்தை அச்சிறுவனின் வார்த்தைகள் உடைத்துப் போட்டு விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்."

தனக்கு இஸ்லாத்தின் மீது ஆர்வம் தோன்ற இந்த நிகழ்வே காரணமாக இருந்தது என்கிறார் அவர். ஒரு வாரம் கழித்து இங்கிலாந்து திரும்பிய அவர் இஸ்லாம் பற்றி மேலும் அறிந்து கொள்வதில் நேரம் செலவிட்டார். சுமார் ஓராண்டிற்குப் பிறகு சகோதரர் யூசுஃப் இஸ்லாம் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் அவர் முன்னிலையில் ஷஹாதத் சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் சகோதரர் இத்ரீஸ்.

**கணக்குகள் சரிபார்க்கப்படும் அந்த மறுமை நாளில் அவனுக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருக்கிறது..!**



"அப்போது அந்தச் சிறுவனுக்கு 14 அல்லது 15 வயதிருக்கும். இப்போது அவன் ஒரு இளைஞனாக இருப்பான். அவனுக்குத் திருமணமாகி குழந்தைகள்கூட இருக்கலாம். அன்று அவன் சொன்ன அந்த எளிய வார்த்தைகள்தான் என் வாழ்வில் எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை அவன் அறியமாட்டான்.

கணக்குகள் சரிபார்க்கப்படும் அந்த மறுமை நாளில் அவனுக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருக்கிறது. அவனுடைய நன்மை-தீமைகளின் பட்டியல் படிக்கப்படும்போது அவன் நினைப்பான், 'அவ்வளவுதான்.. நான் செய்த நன்மைகள் எல்லாமே பட்டியலிடப்பட்டு விட்டன'.

அப்போது வானவர்கள் மேலும் பட்டியலைத் தொடர்வார்கள். அவனுடைய வார்த்தைகளின் தாக்கத்தினால் சொல்லப்பட்ட ஷஹாதத் கலிமாக்கள், எழுதப்பட்ட புத்தகங்கள், கட்டுரைகள், மேடைப்பேச்சுக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.. இவை அனைத்தின் நன்மைகளிலும் நிச்சயம் அவனுக்குப் பங்கு இருக்கும்." என்று நெகிழ்ந்து கூறுகிறார் சகோதரர் இத்ரீஸ்.

அல்லாஹ் அந்த இளைஞனின் இம்மை, மறுமை வாழ்வை சிறக்கச் செய்வானாக!

# ஒரு துரோகத்தின் முன்னால்..!



சற்றும் எதிர்பாராத நேரத்தில்
வந்து நிற்கும்
அழையா விருந்தாளிபோல
துரோகம் ஒன்று
முன்னே வந்து நிற்கலாம்..!

ஒருவேளை
வெகு அருகிலேயே
ஒரு திருடனைப் போல
ஓடி ஒளிந்துகொண்டிருக்கலாம்..!

அதன் முன்பு
கண்ணீர்விட்டோ
அழுது புலம்பியோ
ஒரு துளி இரக்கத்தைப்
பெற்றுவிடலாமென்று
நினைத்துவிடாதீர்கள்..!

அது
அன்பை..., காத்திருப்பை..,
தியாகத்தை... துயரத்தை..,
ஒருபோதும்
ஏறிட்டுப் பார்க்காது..!

மூக்கு நுனியில்
நாற்காலியிட்டு அமர்ந்திருக்கும்
உங்களின் பெருங்கோபம்
நியாயமானதென்றாலும்..,
மற்றவர் முன்னிலையில் அதனை
அடையாளம் காட்டியோ
சத்தம் போட்டோ
பேசிட வேண்டாம்..!

உங்களைக் குற்றவாளியாக்கிப்
பார்த்திட
ஓராயிரம் பொய்களைப்
புனைந்து வந்திருக்கும் அது..!

சற்றும் பொருட்படுத்தாது
விட்டுவிடுங்கள் அல்லது
புன்னகை ஒன்றை ஏற்றி
வாசல் வரை சென்று
வழியனுப்பிப் பாருங்கள்..!

தலைகுனிந்தவாறு
விடைபெறாமலேயே
சென்றுவிடக்கூடும்
அதிகம் கடினம் என்றாலும்
பெருங்கருணைகொண்டு
மன்னித்துவிடுங்கள்..!
அடுத்த நிமிடமே
அது இறந்துவிடும்!

# யூஸுஃ:பும் சகோதரர்களும்..!

எல்மா ரூத் ஹார்டர்

தமிழில்
மழலைப்ரியன்

இஸ்ஹாக்கின் தந்தை இப்ராஹீம் (அலை)

இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் தலைசிறந்த கொள்ளுப்பேரன்! இறைவனின் விருப்பப்படி இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள் சாடிஸ் தேசத்து 'உர்' என்கின்ற இடத்தைவிட்டு வெளியேறினார். பாலைவனம் ஒன்றில் குடியேறினார். அவரது வம்சத்தில் சிறப்பியல்புடைய குழந்தை ஒன்று பிறந்தது அது அவருடைய கொள்ளுப் பேரன்! ஆந்தக் குழந்தையின் பெயர் யூஸுஃப்.,!

யஃகூ.'பின் தந்தை இஸ்ஹாக் (அலை)

இவர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வந்தனர். தங்கள் குழந்தைகளுக்கும் அல்லாஹ்வைப் பற்றிக் கற்பித்து வந்தார்கள். அதனால் யூஸுஃபும் இறைவன் பற்றிய தெளிவான ஞானத்துடன் வளர்ந்து வந்தார்.

யூஸுஃப் மிக அழகாக இருந்தார். வலிமையாகவும் இருந்தார். அவருடைய தந்தை யஃகூப் அவரை மிகவும் டீநசித்தார்.

யுகூஃப் நபிக்கு பன்னிரண்டு மகன்கள். அவர்கள் ஆட்ட மந்தைகளை மேய்த்து வந்தார்கள். அவற்றின் உணவிற்காகவும், தண்ணீருக்காவும் பல இடங்களுக்குச் சென்றார்கள். சிலசமயம் பசுமையான புல்வெளியைத் தேடி மலைகளுக்கு அப்பாலும் செல்ல வேண்டியிருந்தது.

யூஸு.'ப் நபியின் தந்தை யஃகூ.'ப் (அலை)

**இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் தலைசிறந்த கொள்ளுப்பேரன்!**

யகூஃப் நபி யூஸு பை அதிகம் நேசித்தார்கள் அல்லவா? இதைக் கண்டு யூஸு பின் பத்து சகோதரர்களும், யூஸுஃப் மீது பொறாமை கொண்டார்கள்.!

யூஸு.'ப் நபி (அலை)

## திருக் குர்ஆன்

அத்தியாயம் 112

அல் இக்லாஸ்

நேர்மை-வாய்மை

மக்காவில் அருளப்பட்டது

வசனங்கள் 4

| |
|---|
| بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ |
| لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ۝ |
| 112:1லம் யலி (dh) த் வலம் (dh) யூலத் |
| 112:3 அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. |
| وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ ۝ |
| 112:2வலம் யகுல்லஹு கு (f)ஃப்வன் அஹ (dh)த் |
| 112:4மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர். |

**இம்மாத வசந்த மழலை..!**




அமீரா ஸமானா
பெற்றோர்
ஸையத் அலீ - ரிஸ்வானா
கல்பாக்கம் (சென்னை) தமிழ்நாடு
ஜிலீப் ஷுவைக்குவைத்




# காதலர் (அநாகரிக) தினம்!

**அண்மைக் காலமாக பொதுமக்கள் மத்தியில் பரவிவரும் காதலர் தினம் பற்றி அறிஞர் இப்னு உஸைமீன் (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்டது..!**

*சமீப காலமாக காதலர் தினம் கொண்டாடி மகிழ்வது பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக மாணவிகள் மத்தியில் மிக வேகமாக பரவி வருகின்றது. காலணி முதல் தலையணி வரை முற்றிலும் சிவப்பு நிறத்தால் ஆன ஆடைகளை அணிந்து, இந்நிகழ்ச்சியை ஒரு பண்டிகையாக கொண்டாடும் கிறித்துவர்கள், தங்களுக்கிடையே சிவப்பு நிற மலர் கொத்துக்களையும் பரிமாறிக் கொள்கின்றனர். இது போன்ற நிகழ்ச்சிகளை முஸ்லிம்கள் கொண்டாடுவது, அல்லது இது போன்ற நிகழ்ச்சிகளில் முஸ்லிம்கள் கலந்து கொள்வது பற்றி முஸ்லிம்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை.....?*



காதலர் தினம் என்ற நிகழ்ச்சியை கொண்டாடுவதற்கோ அல்லது அதுபோண்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கோ கீழ்க்கண்ட காரணங்களால் இஸ்லாத்தில் ஒருபோதும் அனுமதியில்லை.

1. காதலர் தினம் போன்ற நிகழ்ச்சிகள் இஸ்லாமிய மார்க்கத்தில் இல்லாத ஒரு (பித்அத்) அநாச்சார புதினமாகும்.
2. காதலர் தினம் போன்ற நிகழ்ச்சிகள் இஸ்லாமிய மார்க்கம் அனுமதிக்காத தவறான வழிகளில் உருவாகும் காதல் மற்றும் தீய பழக்கங்க ஊக்குவிக்கின்றன.
3. இதுபோன்ற நிகழ்ச்சிகள் இளைஞர்கள் மற்றும் இளைஞிகள் மனதில் தவறான எண்ணங்களை உருவாக்குவதோடு, நபிவழிக்கு முற்றிலும் முரணாணதாகும்.

காதலர் தினம் போன்ற நாட்களில் உணவோ, உடையோ அல்லது குடிபானங்களோ எதுவாக இருந்தாலும்,இஸ்லாம் அனுமதித்த முறைக்கு மாற்றமாக இருக்குமாயின் அதுபோன்ற நிகழ்வுகளிலிருந்து முற்றிலும் விலகி இருப்பதே உண்மையான முஃமின்-இறைநம்பிக்கையாளனுக்கு உகந்ததாகும்.

நெறிமுறையின்றி எல்லாவற்றையும் பின்பற்றுவோம் என்ற நிலையில் இருக்கும் மனிதர்களுக்கு மத்தியில், நெறியுடன் வாழும் முறைகளை மட்டுமே பின்பற்றுவோம் என்ற கொள்கையை உறுதியோடு செயல்படுத்தும் இஸ்லாமிய மார்க்கத்தை சார்ந்தவராக இருப்பதற்காக ஒவ்வொரு முஸ்லிமும் பெருமிதம் கொள்ள வேண்டும். தெரிந்தோ அல்லது தெரியாமலோ இருக்கின்ற இதுபோன்ற (பித்அத்) அநாச்சார செயல்களில் ஈடுபடுவதில் இருந்தும் நம்மை காப்பாற்றி, நேர்வழி காட்ட போதுமானவன் வல்ல நாயன் அல்லாஹ் ஒருவனே..!




# உலகளாவிய சமூகசேவை சிரமேற்கொள்ளும் குவைத் செம்பிறை..!

**இக்கட்டான நேரங்களில் சமூகப்பணி என்பது செஞ்சிலுவை சங்கம் என்ற பெயருடன் மட்டுமே தொடர்புப்படுத்தப்படுகின்றது.இந்த அமைப்பு மட்டுமல்லாது, குவைத் உள்ளிட்ட வளைகுடா மற்றும் இஸ்லாமிய நாடுகளில் இதே பணிகளை செம்பிறை சங்கங்களும் ஆற்றுகின்றன என்பது எத்துணை பேருக்குத் தெரியும்..?**

சமூக அறப்பணிகளில் குவைத் உலகநாடுகளில் முன்னணி வகிக்கின்றது. குறிப்பாக சமூகசேவையில் சர்வதேச அளவில் இதன் பணி பெரும் தாக்கம் கொண்டது. மத இன வேறுபாடின்றி உலகம் முழுவதும் போர் மற்றும் இயற்கை சீற்றங்கள் உள்ளிட்ட பாதிப்புக்களால் தேவை நாடி நிற்கும் பல்வேறு நாடுகளுக்கும் உதவி செய்துவருகின்றது.சமூக சேவையில் இதன் செம்பிறை சங்கம் அரும்பணி ஆற்றி வருகின்றது.

அண்மைக்கால



நிகழ்ச்சி மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றது.

குவைத் சுகாதாரத் துறையுடன் இணைந்து உயர்தர பயிற்சிகளை வழங்குகின்றது.

திடீரென ஏற்படும் எதிர்பாரா பேரழிவுகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்திப பரஸ்பரம் பதில் ஒத்துழைப்புக்களை நல்குகின்றது.

காணாமல் போனவர்கள் பற்றிய தேடல்களும் இதன் பணிகளில் ஒன்றாகும். அதுமட்டுமன்றி சிறைப்பட்டிருக்கும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகளை மக்களிடமிருந்து பெற்று சிறைத் துறையினருடன் இணைந்து விநியோகம் செய்வதிலும் பங்கு



குவைத் மற்றும் வெளிநாடுகளில் அமைந்த அறக்கட்டளை அமைப்புக்களுடன் இணைந்து சமூகசேவைப் பணிகளில் ஈடபட்டு வருகின்றது. மனிதாபிமான அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் சர்வதேச அளவில் ஒரு




சேவையைக் குறிப்பிட வண்டுமென்றால்,சோமாலியாவில் இதன் பணியைக் குறிப்பிடலாம்.

இதன் குறிப்பிட்ட பணிகளில் முக்கியமான சில:

தான் ஆற்றும் அனைத்து மனிதாபிமான சேவைகளைக் குறித்த விவரங்களை வைக்கின்றது. மனித உரிமைகள் குறித்த ஆவணங்கள்,தன்னார்வ பணிகள்,மீட்புப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபடுகின்றது. தன் அமப்புசார்ந்த ஊழியர்களுக்கு முதலுதவி

புரிந்துணர்வுத் தொடர்பை சமூகசேவையில் ஏற்படுத்தி வருகின்றது.




பெறுகின்றது.

இதுதவிர,குவைத் தேசிய வங்கி ஒத்துழைப்புடன்ஈ, குவைத் ஏர்வேஸ் அமைப்புடன் இணைந்து அதில் பயணிக்கும் மக்களிடமிருந்து உபரி பொருளாதார உதவிகளைப் பெற்று வழங்கும் பல்சாம் திட்டவரைவும் இதன் பணிகளில் ஒன்றாகும்!இந்த பணம் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகள்,மருத்துவ சேவை உள்ளிட்ட பல சேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

## விருது பெற்ற அரபு வசந்தம்..!

'அரபு வசந்தம்' செயற்பாட்டாளர்கள் ஐவருக்கு ஐரோப்பிய பாராளுமன்றம் கருத்துச் சுதந்திரத்திற்கான விருதினை வழங்கியுள்ளது. கருத்துச் சுதந்திரத்திற்கான மேற்படி விருதினை.துனீசியாவில் ஆரம்பித்த மல்லிகைப் புரட்சிக்கு அடிப்படையாய் அமைந்த முஹம்மத் பூஅஸீஸ் எகிப்தைச் சேர்ந்த அஸ்மா மஹ்பூழ், லிபியாவைச் சேர்ந்தவர்களான அஹ்மத் சுபைர், அஹ்மத் அல் சனூசி ஆகியோர் இவ்விருதை வென்ற வெற்றியாளர்களாவர்.

இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்ட சிரியாவைச் சேர்ந்த கேலிச்சித்திர ஊடகவியலாளர் அலி இஸ்ஸத் மற்றும் சட்டத்தரணி ரஸான் செய்துூனா ஆகியோர் அந்நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளின் காரணமாக விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

வெற்றியாளர்களுக்கு கௌரவ விருதுடன் சேர்த்து பரிசுத் தொகையாக 65,000 அமெரிக்க டாலர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது.



## சகுனியா சர்கோசி..?



கொல்லப்பட்ட முன்னாள் லிபிய ஜனாதிபதி கடாபி, 2007 ஆம் ஆண்டு பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலின்போது நிக்கோலஸ் சார்கோசிக்கு ரூ. 325 கோடி பணம் கொடுத்துள்ளார் என்று பிரான்ஸைச் சேர்ந்த துப்பறியும் இணையதளமான மீடியாபார்டு-ம் குற்றம்சாட்டியுள்ளது. பண பரிவர்த்தனை செய்யப்பட்டதற்கான முக்கிய ஆவணங்களைப் பார்த்ததாக அந்த இணையதளத்தின் நிருபர் பேப்ரிஸ் அர்பி தெரிவித்துள்ளார். இந்த குற்றச்சாட்டை ஏற்கனவே கடாபியின் மகன் சைபுல் இஸ்லாம் எழுப்பியிருந்தார். கடாபியின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்திற்கு நேட்டோ படையில் இருந்த பிரான்ஸ் உதவி செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.இரண்டாவது முறையாக ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடும் சார்கோசிக்கு இந்த குற்றச்சாட்டால் பாதிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## அறிஞருக்கு அனுமதி மறுப்பு..!

ஷேக் யூஸுஃப் அல் கர்ளாவி (86) , பல அமைப்புகளின் கூட்டமைப்பான ஃபிரான்ஸ் இஸ்லாமிய அமைப்புகளின் ஒன்றிய அழைப்பின் பேரில் அடுத்த மாதம் அங்கு விஜயம் செய்ய இருந்தார்.

"இந்த மனிதர் பிரான்ஸ் குடியரசின் எல்லைக்குள் வரவேற்கப்பட மாட்டார் என கத்தார் அமீரிடம் நானே நேரடியாகத் தெரிவித்துள்ளேன்" என சார்கோசி தெரிவித்துள்ளார். சர்கோசி இஸ்லாமிய எதிர்ப்புக்கு பேர் போனவர் என்பது குறிப்பிடத்தக்கது."ஷேக் கர்ளாவியிடம் இராஜதந்திர கடவுச் சீட்டு உள்ளது. அவருக்கு வீசா அவசியமில்லை. எனினும், அவர் பிரான்ஸினுள் நுழைவதை தடுக்கும் வகையில் நாம் நடவடிகை எடுப்போம்" என சார்கோசியின சிறப்பு ஆலோசகர் குவைனோ தெரிவித்துள்ளார்.



அல்-ஜஸீரா இணையதளத்தில் ஷரீஆவும் வாழ்வும் என்ற பிரபல்யமிக்க வாராந்தர நிகழ்ச்சியை கர்ளாவி நடத்தி வருகிறார். அத்துடன் துனீஷியா, எகிப்து, லிபியா உள்ளிட்ட பல நாடுகளில் ஏற்பட்ட எழுச்சியை அவர் பலமாக ஆதரித்ததுடன் சிரிய எதிரணியினரின் நிதி திரட்டல் நடவடிக்கையையும் ஆரம்பித்து வைத்தார்.'அரபு வசந்தம்' அமைப்பை தீவிரமாக ஆதரிப்பதால் கர்ளாவி பலரது எதிர்ப்பை சம்பாதித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தங்கச் சுரங்க சவூதி..!

சவூதியில் பழமையும், வரலாற்று சிறப்பும் மிக்க மதீனா மாநிலத்தின் சுற்றுப்புறங்களில் தங்கம் உள்ளிட்ட உயர் மதிப்பு உலோகங்கள் அதிக அளவில் இருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேய்ச்சல் நிலங்கள், மக்களின் வாழ்விடங்களின் அடியில் காணப்படும் இம்மதிப்பு மிக்க கனிமங்களை மேற்கொள்ள அரசு தரப்பு இன்னும் அனுமதியை தரவில்லை சவூதியில் தற்சமயம் மூன்று தங்கச்சுரங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன. அவற்றுள் அல் மஹத் அல் தப்பாப், அல் ஷுகைராத் மதீனாவிலும், அல் அமர் அல் குவாவியா என்பது ரியாத் மாநிலத்திலும் அமைந்துள்ளது!



## சிக்கலாகும் சிரியா கலவரம்..!



சிரியாவில் கலவரம் எண்ணற்ற உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றது. இதுவரை 9100 பேர் கொல்லப்பட்டுள்ளதாக கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். ஐ.நா.சபை சிரியாவில் மோதல் தவிர்ப்பை ஏற்படுத்தி, ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்துமாறு வேண்டியுள்ளது.

# கருத்தாய்வு

பொருத்தமான பதில்களை ✓ செய்க..!

கருத்தாய்வுப் படிவம்

வசந்தம் குறித்து தங்களின் ஒட்டுமொத்த கருத்து.. சில வரிகளில்...

**வசந்தம் தங்களுக்கு எவ்விடத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றது...?**

- ◯ IPC தலைமையகம்-கிளைகளில்..!
- ◯ வசிப்பிடங்களில்..!
- ◯ பொதுவான மற்றும் இன்ன பிற இடங்களில்.!

**வசந்தத்தில் வெளிவரும் ஆக்கங்கள் பற்றிய தங்கள் கருத்து..?**

- ◯ மிக்க நன்று..!
- ◯ பரவாயில்லை..!
- ◯ மோசம்..!

**வசந்தத்தின் ஆக்கங்களில் தங்களுக்கு மிகவும் பிடித்தது எது..?**


- ◯ இஸ்லாமிய ஆக்கங்கள்..!
- ◯ சிறப்புக் கட்டுரைகள்..!
- ◯ பொதுவான மற்றும் இன்னபிற ஆக்கங்கள்..!

**வசந்த ஆக்கங்களின் வரிசைக் கிரமங்கள் எப்படி..?**


- ◯ மிக்க நன்று..!
- ◯ பரவாயில்லை..!
- ◯ மோசம்..!

**வசந்தம் தன் கட்டுரை மற்றும் செய்தி ஆக்கங்களுக்கு தக்கவாறுபடங்களைத் தருகின்றதா..?**

- ◯ ஆம்..!
- ◯ பரவாயில்லை..!
- ◯ இல்லை..!



**வசந்தம் கிடைக்கப் பெறுவது எளிதாக இருக்கின்றதா&?**




- ஆம்..! ◯
- சற்றே சிரமத்துக்குப் பின்..! ◯
- எளிதாக இல்லை..! ◯




**தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு வசந்த படைப்புக்கள் தாக்கம் ஏற்படுத்தக்கூடியவையா..?**



- ஆம்..! ◯
- சுமாராக..! ◯
- இல்லை..! ◯



**வசந்தத்தின் மொழித்தரம் எப்படி..?**




- உயர்தரமானது..! ◯
- சுமாரானது..! ◯
- கடினமானது..! ◯





**வசந்த பக்கங்கள்,தரம் போதுமானதாக.., சரியானதாக இருக்கின்றதா..?**



- சரியானது..! ◯
- சரியானது..!சிறிது மாற்றம் தேவை..! ◯
- முற்றிலும் மாற்றம் தேவை..! ◯



**வசந்தத்தின் முகப்பு அட்டை மற்றும் வடிவமைப்பு குறித்த தங்கள் கருத்து..!**



- மிக்க நன்று..! ◯
- பரவாயில்லை..! ◯
- மோசம்..! ◯



## சுயவிவரங்கள் Personal Data

பெயர் Name: விரும்பினால் தரலாம்

வயது Age:

பாலினம் Gender: ஆண்/பெண் Male/Female

தேசிய இனம் (நாடு) Nationality:

குவைத்தில் வசிக்கும் இடம் Location @ Kuwait:

செல்லிடைப்பேசி Cell No.: விரும்பினால் தரலாம்

மின்னஞ்சல் email ID:

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது musavir2010@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles -மினா பஜார்,மிர்காப்-SEEMATY, மிர்காப்-Old Tanjai Restaurant,IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம்.



சிறுமியருக்கெதிரான
வன்கொடுமை!



பாலியல் வன்கொடுமை!



பாரம்பர்ய
பழக்கவழக்கசார்
வன்முறை..!

மேன்மையின் இலக்கணமாம் பெண்மையை போற்றாது..,
வன்மையின் இலக்கணத்தை வனிதையர் மேல்
அவிழ்த்துவிடும் வன்கொடுமைகளைப் பற்றிய ஓர் அலசல்..!

## தீர்வு என்ன...?



கடத்தல் மற்றும்
பொருளாதாரப்
பண்டங்களாய்..!



பெண் சிசுக்கொலை!



அமில வீச்சுக்கள்!







# 2011 வசந்தம்




2011 வருடத்திய பன்னிரு இதழ்களையும் பெற்றுக் கொள்ள..!




நித்தம் உங்கள் நெஞ்ச வனங்களில் இதமாய் வருடும் வசந்த தென்றலின் 2011 வருடத்திய அனைத்து இதழ்களையும் ஒருசேரப் பெற்றுக் கொள்வீர்...!

பிரதிகள் IPC தலைமையகத்தில் மட்டுமே கிடைக்கும்..!

தொடர்புக்கு
Hotline
97266683

